பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 09 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற 100 நாட்களில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை நிறைவேற்றி இருப்பதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.
2. தமிழகத்தில் 2026-ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்கு திமுக-வினர் தயாராக வேண்டுமென்று அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமும், தென்பிராந்திய ராணுவமும் இணைந்து நடத்தும் ஒருங்கிணைந்த பயிற்சி கருத்தரங்கம் சென்னையில் இன்று தொடங்குகிறது.
4. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
5. ஆசிய சாம்பியன் ஹாக்கிக் கோப்பையை ஐந்தாவது முறையாக வென்றுள்ள இந்திய ஆடவர் அணிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற 100 நாட்களில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை நிறைவேற்றி இருப்பதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மகளிர் மேம்பாட்டிற்காக மூன்று லட்சம் கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டிருப்பதாகவும், இளைஞர்களின் திறன்

மேம்பாட்டிற்காக இரண்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருப்பதாகவும் கூறினார்.

வஃக்ப் வாரிய திருத்தச்சட்ட மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்த மசோதா இஸ்லாமிய மக்களின் நலனுக்காக கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாகவும், சிறுபான்மையினரின் நலனுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு கிரண் ரிஜிஜூ குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

மத்திய அரசு கடந்த 100 நாட்களில் நிறைவேற்றியுள்ள திட்டங்களின் மூலம் அனைத்து தரப்பு மக்களிடையேயும் நேர்மறையான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தூர்தர்ஷனுக்கு அவர் அளித்த பேட்டியில், பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் மூன்று கோடி பேருக்கு வீடுகள் வழங்கப்பட இருப்பதாகவும், 70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஐந்து லட்சம் ரூபாய் வரையிலான காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் திறன் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான எட்டு புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏழைகள், நடுத்தர மக்கள். இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் அரசின் கொள்கைகளினால் பயனடைந்திருப்பதாகவும் தெரிவித்த அவர், கடந்த பத்து ஆண்டுகளில் நாடு மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது என்றார்.

ரயில்வே துறையிலும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றிருப்பதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

வாக்குப்பதிவுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**Anantnag, Pulwama, Shopian, Kulgam, Doda, Ramban, Kistwar** ஆகிய ஏழு மாவட்டங்களில் இடம்பெற்றுள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இன்றைய தேர்தலில் 219 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

23 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஜம்மு-கஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மூவாயிரத்து 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அவை 100 சதவீதம் இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாவது கட்டமாக 26 தொகுதிகளில் வரும் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமா 40 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் எட்டாம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் இதுவரை நடந்த தேர்தல்களில் பெற்ற வெற்றியைப் போன்று இனி வரும் தேர்தல்களிலும் திமுக வெற்றிபெறும் என்று அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற திமுக முப்பெரும் விழா மற்றும் பவளவிழாவில் கட்சியின் மூத்த நிர்வாகிகளுக்கு பெரியார், அண்ணா, கருணாநிதி உள்ளிட்டோரின் பெயர்களில் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

கட்சித் தொண்டர்களின் உழைப்பும், தியாகமும் இல்லாமல் திமுக இந்த வெற்றியை பெற்றிருக்க முடியாது என்று அவர் கூறினார்.

நமது அடுத்த இலக்கு 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்தான் என்றும், கட்சியினர் இப்போதே தயாராக வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின் மாநிலத்தில் நிறைவேற்றி வரும் மக்கள் நலத்திட்டங்களையும் திரு மு க ஸ்டாலின் பட்டியலிட்டார்.

**[]<<<>>>[]**

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமும், தென்பிராந்திய ராணுவமும் இணைந்து நடத்தும் இரண்டு நாள் பயிற்சி கருத்தரங்கம் இன்று சென்னையில் தொடங்குகிறது.

பேரிடரை எதிர்கொள்வதற்கான ஆயத்த பணிகளை மேம்படுத்துவது, பேரிடரின்போது இணைந்து செயல்படுவது உள்ளிட்ட பயிற்சிகளை வழங்கும் வகையில் இந்த கருத்தரங்கு நடைபெறுகிறது.

ரயில்வே, சாலை போக்குவரத்து, விமான போக்குவரத்து, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்ற துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், மாநில மற்றும் தேசிய பேரிடா மேலாண்மை ஆணையத்தின் பிரதிநிதிகளும் இந்த கருத்தரங்கில் பங்கேற்கின்றனர்.

ராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்க உள்ளனர்.

வானிலை ஆய்வு மையம், மத்திய நீர்வள ஆணையம் மற்றும் வனத்துறை அதிகாரிகளும் இந்த கருத்தரங்கில் பங்கேற்கின்றனர்.

சுனாமி, நிலச்சரிவு, வெள்ளம், காட்டுத்தீ, புயல் போன்ற பேரிடரின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்கான சவால்கள் குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட உள்ளது.

[]<<<>>>[]

திருநெல்வேலி ரயில்வே பணிமனை மேம்பாட்டுப் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறைவடையும் என்று தெற்கு ரயில்வேயின் மதுரைக் கோட்ட மேலாளர் திரு சரத் ஸ்ரீவத்ஸவா தெரிவித்துள்ளார்.

நெல்லை ரயில் நிலையத்தில் நேற்று அவர் ஆய்வு செய்ததாகவும், பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தியதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - திருமலை ) ---33 செகண்ட்*

[]<<<>>>[]

கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து தமிழக எல்லைப்பகுதியான நீலகிரி மாவட்டத்திற்கு வரும் வாகனங்கள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வாகனங்களில் வரும் பயணிகள் உடல் வெப்பநிலை சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) ---35 செகண்ட்*

[]<<<>>>[]

இலங்கையில் அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகிறது.

[]<<<>>>[]

லெபனானில் ஹெஸ்புல்லா அமைப்பினர் மீது நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**[]<<<>>>[]**

இந்தியா ருமேனியா இடையே வலுவான நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலான நினைவு அஞ்சல் தலையை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியா – உருகுவே இடையே வெளியுறவு அமைச்சக ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் நேற்று அந்நாட்டில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு சத்பவ் திட்டத்தின் கீழ் 53 டன் வெள்ள நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி நாகையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தஞ்சை பெரியகோவிலில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று கோவிலைச் சுற்றி அமைந்துள்ள கிரிவலப்பாதை எட்டு ஆண்டுகளுக்குப் பின் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே ஏரியில் குளிக்கச் சென்ற நான்கு குழந்தைகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் இன்று நடைபெறும் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய சாம்பியன் ஹாக்கிக் கோப்பையை ஐந்தாவது முறையாக வென்றுள்ள இந்திய ஆடவர் அணிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்திய அணியின் சிறப்பான திறமை மற்றும் அர்ப்பணிப்பு நாட்டை பெருமையடையச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

சீனா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் - ஜப்பானின் **kenta nishimoto-**வை எதிர்கொள்கிறார்.

***End of News***